## 28.17 உயர்நிலைக் குழுவின் அறிக்கை இயல் மூன்றின் 13 சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள் நீர்வழிகள் மற்றும் பிற தொடர்வு வழிகள் என்ற தலைப்பின் மீது ஆணை

ஊரக வளர்ச்சி (சி4) துறை

அரசாணை (நிலை) எண். 119 நாள் : 05.07.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 75, ஊரக வளர்ச்சித் துறை , நாள்.: 14.03.97.
2. அரசு ஆணை (நிலை) எண்.320, ஊரக வளர்ச்சித் துறை , நாள்: 11.11.97
3. அரசு ஆணை (நிலை) எண்.78, ஊரக வளர்ச்சித் துறை, நாள் : 28.04.1998

**ஆணை**

இந்திய அரசியலலைமைப்பு சட்டம், அட்டவணை II–ல் மாநில அரககள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டிய 29 பொருட்கள் என்னென்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி முதல்கட்டமாக மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று சாலைகள், சிறுபாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிறதொடர்பு வழிகள் என்ற தலைப்பில் பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசு ஆணையில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகளுக்கு மற்றும் அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்டும் உயர்நிலைக்குழு அமைத்து பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரச ஆணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. உயர்நிலைக்குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.01.1999 அன்று சமர்ப்பித்தது.

2. உயர்நிலைக்குழுவின் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை அரசு ஏற்பது குறித்து முடிவு செய்ய 03.05.1999 மற்றும் 04.05.1999 ஆகிய நாட்களில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளின் படி 13 சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், நீர்வழிகள் மற்றும் பிறதொடர்பு வழிகள் என்ற தலைப்பில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் இவ்வாணையின் இணைப்பு 1–ல் கண்டவாறு ஒப்படைப்பு செய்யப்படுகிறது. மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு மேற்பார்வை மற்றும் கண்காணித்தல் போன்ற கூடுதல் பொறுப்புகள் இவ்வாணையின் இணைப்பு 2–ல் கண்டவாறு ஒப்படைப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

3. இவ்வாணை நெடுஞ்சாலைத் துறையின் 28.06.1999, நாளிட்ட அலுவல் சார்பு எண்.10862/எச்./டபிள்யூ/99–1–ன் இசைவுடன் வெளியிடப்பட்டது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## 28. DEVOLUTION OF POWERS

### இணைப்பு – 1

### சாலைகள் , சிறுபாலங்கள் , நீர்வழிகள் மற்றும் பிறவழிகள்

### கிராம ஊராட்சிகள்

1. கிராம ஊராட்சி சாலைப் பணிகள் நடைபெறுதற்கான நிதி ஆதாரங்களை உரிய துறையிடமிருந்து பெற்று செயல்படுத்தப்படும் பணியினை மேற்பார்வையிடுதல்.

2. ஊராட்சி சாலைகள் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடல் செயல்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல் பணிகளுக்காக கிராம ஊராட்சிகள் தொழில் நுட்ப வல்லுநர்களைப் பயன்படுத்தி கொள்ளலாம்.

3. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இதர வளர்ச்சித் திட்டங்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் வெளிநாட்டு நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் ஊராட்சி சாலை பணிகள், இணைப்புச் சாலைப் பணிகள் ஆகியவற்றினை மேற்பார்வையிடுதல்

### ஊராட்சி ஒன்றியங்கள்

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் நவீன (Innovative) ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், வெளிநாட்டு நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் ஊராட்சி ஒன்றிய சாலைப்பணிகள், இணைப்புச் சாலைப்பணிகள் திட்டம் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆகியவற்றினை செயல்படுத்துதல்.

### மாவட்ட ஊராட்சிகள்

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் நவீன (Innovative) ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் வெளிநாட்டு நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்றப்படும் உள்ளாட்சிக்குட்பட்ட சாலைப்பணிகள், இணைப்புச் சாலைப்பணிகள் திட்டம் மற்றும் சாலை பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் அமைக்கப்படும் உள்ளாட்சிக்குட்பட்ட சாலைப் பணிகளுக்கான திட்டங்களைத் தீட்டுதல் ஆய்வு செய்தல்.

### இணைப்பு –2

### ஊராட்சி ஒன்றியங்கள்

1. ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் போடப்படும் சாலைப் பணிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.

2. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ்போடப்படு,ம் சாலைப் பணிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

3. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் போடப்படும் சாலைப்பணிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் ஆய்வு செய்யலாம்.

4. ஊரக சாலைகள் மற்றும் சிறப்பு சாலைகள் திட்டத்தில் போட வேண்டிய சாலைகள் மற்றும் ஆய்வு வட்டார வளர்ச்சி அலுவலருடன் செய்யலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

1. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் மற்றும் நவீன ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் பற்றி திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஆய்வுச் செய்யலாம்.

2. கோட்ட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் (மாநிலத் திட்டம்) பற்றி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சியுடன் ஆய்வு செய்யலாம்.